தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 ஏப்ரல் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Research Centre in Printing Technology

* 596 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Research Centre in Printing is to be located in this State by the Central Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கு முகத்தான், மைய அரசினரால் அமைக்கப்பட்ட அச்சுத் தொழில் நுட்ப இயல் குழு, தனது அச்சுத் தொழில் நுட்ப இயல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் ஒன்றை சென்னையில் நிறுவலாம் எனப் பரிந்துரைத் துள்ளது. இச் செயற்குறிப்பின் மீதான தனது ஒப்புதலை மைய அரசு வழங்குவதைச் சார்ந்து தொடர் நடவடிக்கை அமையும்.

THIRU N. DENNIS: Sir, may I know the amount invested for this centre?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் இல்லை. அப்படி ஒரு ஆராய்ச்சி நிலையம் சென்னையிலே அமையலாம் என்று அந்தக் குழுவினர் சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 19-ஆம் தேதி இங்கே வந்து கூறினார்கள். அந்தக் குழுவினர் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதன்மீது மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டும் அதற்குப் பிறகுதான் அதுபற்றிய முழு விவரங்களும் நமக்குக் கிடைக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தக் குழுவினரின் பரிந்துரைகளில் முக்கியமானவை என்னென்ன இருக்கின்றன? எப்போது வேலை துவங்கும் என்று மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : Establishment of Research and Development Centre in Printing Technology என்று அப்படி சென்னையிலே ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நிறுவலாம் என்று குழு பரிந்துரைக்கின்றது. அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதுபற்றிய செலவீடுகள், மதிப்பீட்டுச் செலவு, தொடரும் செலவு, தொடராச் செலவுபற்றி கணக்கிடப் படவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படி அமைய இருக்கிற அச்சுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்திற்கு எப்படிப்பட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்? அந்தத் தொழிலிலேயே ஈடுபட்டவர்கள் இதிலே சேர்க்கப்பட இருக்கிறார்களா? அல்லது புதிதாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் அமைய வேண்டுமென்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று மத்திய அரசு ஒப்புதல் அளிக்குமானால், வல்லுநர் கூடி ஆராய்ந்து இந்த வழிவகைகளை எல்லாம் முடிவு செய்வார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அமைய இருக்கிற இந்த ஆராய்ச்சி நிலையமானது சென்னையில் அமைக்கப்படுமா? அல்லது இந்த அச்சுத் தொழிலில் மிகச் சிறந்து விளங்குகின்ற சிவகாசியில் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் சென்னையில் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய ஒப்புதல் குறிப்பு வந்ததற்குப் பிறகு, எங்கே நிறுவப்பெறுவது எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்களோ, அதனையொட்டி, நாம் திட்டங்கள் தீட்டலாம்.

1973 ஏப்ரல் 2]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether such a Research Centre in Printing Technology has been established in other States? If so, have our Government made any study about it?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. அநேகமாக தென்னக மாநிலங்களுக்கெல்லாம் சேர்த்து இங்கே, சென்னையிலே வைக்கப்பட வேண்டுமென்பதுதான் அந்தக் குழுவினுடைய விருப்பம்.

திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவர் அவர்களே, அச்சுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் எந்த அடிப்படையிலே, யார் யாரைக் கொண்டு, அச்சுத் தொழிலிலே வெளிநாட்டு தொழில் நுட்பம் தெரிந்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறதா? அல்லது நம்முடைய நாட்டிலே தொழில் நுட்பம் தெரிந்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: Board of Technical Studies என்று இருக்கிறது. அந்தக் குழுவினர் அவ்வாறு பரிந்துரைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சி நிலையம், அச்சுத் தொழிலைப்பற்றித் தொழில் நுட்ப வகையில், ஆராய்ச்சி நிலையம் நிறுவவேண்டுமென்றிருக்கிறது. அது சென்னையிலே நிறுவப்படலாம் என்று யோசனை சொல்லி யிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்று உதவி செய்ய முன்வரும் போது, எந்த இடத்திலே நிறுவுவது, யார் யாரைப் பணியாற்ற வைக்கலாம் என்பதைப்பற்றி, பிறகுதான் முடிவு செய்யலாம்.

திரு. கே. எ. வகாப்: ஏற்பட இருக்கும் இந்தத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் மத்திய அரசாங்கத்தினுடைய முழுப் பொறுப்புடன் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா? அதில் மாநில அரசாங்கமும் பங்கேற்கிறதா? அப்படியென்றால், அதனுடைய பங்கு எந்த அளவுக்கு இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவைபற்றிய விவரங்கள் எல்லாம் இப்பொழுது கிடைக்கப்பெறவில்லை. மத்திய அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்கள் என்ன நிபந்தனை விதிக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அதுபற்றி நாம் முடிவு செய்ய முடியும்.